**நாத்தாண்டி பிரதேச சபை - 2024**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாத்தாண்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நாத்தாண்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நாத்தாண்டி பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்குரிய 06 நிலையான வைப்புக்களின் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 1,489,760 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | வருமானங்களை சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 8.73 பேர்ச் காணியின் பெறுமதி ரூபா 87,300 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டதுடன் 01 ஏக்கர் 02 றூட் 34 பேர்ச் அளவினை உடைய 02 காணிகளின் பெறுமதி ரூபா 1,787,300 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய மூலதன உதவியாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,934,660 தவறுதலாக 2024 ஆம் ஆண்டின் போதும் கிடைக்க வேண்டிய மூலதன உதவியாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக கிடைக்க வேண்டிய மூலதன உதவிக் கணக்கு மற்றும் திரண்ட நிதியத்தின் கணக்கு என்பவற்றின் மீதி அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகளின் மீதிகளுக்கு இடையே ரூபா 5,060,159 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளுக்கும் பட்டோலைகளின் மீதிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் சரி செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 763,426 ஆன 03 கணக்கு விடயங்களுக்கு உரிய பட்டோலைகள், மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | உரிய நிலையான சொத்துக்களில் 1989 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியை இனங்காண்பதற்காக எழுத்து மூலத் தகவல்கள் கண்டறிய முடியாதிருந்தமையால் அதற்கான பட்டோலைகள் சமர்ப்பிக்க முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப்பிரமாணம் 104 | 2024 யூலை 16 முதல் செப்தெம்பர் 27 வரையான காலத்தில் காசு சேகரிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பாக முறையான படி விசாரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வில்லை. | நட்டம் தொடர்பாக ஆரம்ப அறிக்கை 2024 ஒக்தோபர் 02 ஆம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரால் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளுமாறு வடமேல் மாகாண பிரதம அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டதுடன் உள்ளூராட்சி திணைக்கத்தின் மூலமும் விசாரணைகள் நடாத்தப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | நிதிப்பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கோ அல்லது அரசாங்கத்தின் | மேலும் நிறுத்தி வைப்பதற்கு தேவையில்லாத வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு தேவையான | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | 2019 சனவரி 10 ஆம் திகதி இலக்கம் 02/2019 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை 05 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான 03 கட்டங்களின் வாடகைக் காலம் 04 – 08 வருடங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்தும் கடை வாடகையை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடை வாடகையை நாளது வரையாக்குவதற்காக மதிப்பீட்டு திணைக்களத்தில் இருந்து தற்போது கோரிகை அனுப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 123,573,230 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 166,177,531 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா ‘000 | சிட்டையிடப் பட்ட வருமானம் ரூபா ‘000 | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா ‘000 | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா ‘000 | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா ‘000 | சிட்டையிடப் பட்ட வருமானம் ரூபா ‘000 | சேகரிக்கப்ப ட்ட வருமானம் ரூபா ‘000 | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா ‘000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 26,792 | 20,113 | 15,189 | 20,836 | 24,143 | 23,640 | 13,418 | 21,443 |
| ii. | வாடகை | 30,103 | 25,935 | 25,810 | 4,903 | 31,949 | 24,369 | 21,159 | 4,955 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,797 | 7,983 | 7,969 | 14 | 3,973 | 8,340 | 8,339 | 2 |
| iv. | ஏனைய வருமானம் | 220,614 | 195,136 | 111,604 | 154,286 | 161,598 | 118,626 | 117,907 | 5,934 |
| | மொத்தம் | 281,306 | 249,167 | 160,572 | 180,039 | 221,663 | 174,975 | 160,823 | 32,334 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| i. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 20,018,742 ஆக இருந்ததுடன் நிலுவைக் காலம் 05 வருடங்களை விஞ்சிய ஆதன வரி மீதி ரூபா 4,680,454 ஆகும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக நடமாடும் வேலைத் திட்டங்கள் மற்றும் ஆதனவரி தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் தற்போது அமுல்படுத்தப்படுகின்றது. இந்த நிலுவைப் பெறுமதியை மேலும் குறைப்பதற்காக வீட்டுக்கு வீடு சென்று கட்டணத்தைச் சேகரிக்கும் விசேட நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிலுவை ஆதன வரியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை ஏடுத்தல் வேண்டும். |
| ii. 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மீள்திருத்தம் செய்ய வேண்டி இருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | சபையின் ஆதனவரி மீள் திருத்தம் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன் காணப்படுகின்ற அரசியல் ரீதியான, சமூக ரீதியான மற்றும் பொருளாதார தாக்கங்களின் காரணமாக அதனை அமுல்படுத்துதல் தாமதமடைந்திருந்த போதிலும் 2025 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகின்றது. | ஆதனவரி மதிப்பீடு காலரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| iii. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி வருமானம் ரூபா 813,247 ஆக இருந்ததுடன் நிலுவைக் காலம் 05 வருடங்களை விஞ்சிய ஏக்கர் வரி மீதி ரூபா 463,373 ஆகும். | ஏக்கர் வரி வழமையாக ஒன்று சேர்ந்தவை ஆகும். அதன் பிரகாரம் அது தொடர்பான மீளாய்வு செய்து நியாமான அறிக்கை ஒன்றுடன் அந்த நிலுவை ஏக்கர் வரியினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஏக்கர் வரியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iv. 05 வருடங்களுக்கு ஒரு தடவை அதிகார பிரதேசத்தில் ஆய்வினை மேற்கொண்டு ஏக்கர் வரி அறவிடக் கூடிய காணிகளை இனங்காண்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | ஏக்கர் வரிகளில் அனேகமானவை தற்போது ஏனைய அலகுகளுக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு கால ரீதியான தேவை ஒன்று காணப்பட்ட போதும் பதவியணியினர் பிரச்சனையின் காரணமாக இதனை அமுல்படுத்துவதற்கு வசதியீனமாக இருந்தது. | காலரீதியில் ஆய்வினை மேற்கொண்டு ஏக்கர் வரியை அறவிடக் கூடிய காணிகளை இனங்கண்டு ஏக்கர் வரியை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை மற்றும் | இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு தற்போது | நிலுவைக் கடை வாடகையை |

| | | |
|---|---|---|
| வாடகை வருமானம் ரூபா 4,177,367 ஆக இருந்ததுடன் நிலுவை காலம் 05 வருடங்களை விஞ்சிய வாடகை மீதி ரூபா 365,356 ஆகும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| 1999 – 2024 காலத்திற்கு உரிய 07 வருமான விடயங்களின் நிலுவை வருமானம் ரூபா 660,319 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி சேவை சங்கத்தை செயலிழந்தமையால் வழங்கப்பட்டுள்ள கடன் தொகைக்கான வட்டி ரூபா 10,836 இணை பதிவளிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளதுடன் மிகுதி தொகை மற்றும் ஏனைய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய ஏனைய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் இன்றி நாத்தாண்டிய சுற்று வட்டத்திற்கு அருகில் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 3,698,760 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உணவு விற்பனை சாலை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட இரும்பு பார்களை வழங்கியதன் காரணமாக இரும்பு பார்கள் துருப்பிடித்ததன் காரணமாக 2025 ஆம் ஆண்டுக்காக வாடகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது. | இந்த பிரதேசத்தில் காணப்படுகின்ற உப்பு கலந்த காற்று மூலம் இரும்புகள் துருப்பிடித்தல் இலகுவாக ஏற்படுகின்றமையால் எதிர்காலத்தில் அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கட்டிடத்தை பழுது பார்த்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேசத்தில் பிள்ளைகளுக்கு அறிவு மற்றும் கல்வி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,377,215 செலவில் நிர்மாணிக்கப்பட்ட முதுகட்டுவ வாசிப்பு மண்டபம் மாணவர்களால் பயன்படுத்தப்படாமல் விளைவற்ற சொத்து ஒன்றுக்கு உட்பட்டு இருந்தது. | இந்த மாணவர்களின் பயன்பாட்டிற்காக தேவையான பிரகாரம் எதிர் காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாசிப்பு மண்டபத்தை பயன்பாட்டிற்கு எடுக்கும் முறையில் வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்துதல் வேண்டும். |
| (இ) | சபைக்கு உரிய துன்கண்ணாவ இலத்திரனியல் நூலகத்தின் சேவை வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டின் போது புறநெகும செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 912,000 | கிடைக்கப் பெற்ற கணனி இயந்திரங்களைப் பயன் படுத்தி சில கணனி பாட நெறிகளை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் கோரி செயற்திட்ட | நூலகத்தின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களுக்கு உச்ச சேவையை வழங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான கணனி மற்றும் துணைப்பாகங்களைப் பயன்படுத்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் நூலகர் வாரத்திற்கு 03 நாட்கள் மாத்திரம் சேவைக்கு வருகை தருகின்றமையால் முழு நேர நூலகர் ஒருவர் காணப்படாமை நூலகத்தின் சேவையை உச்ச அளவில் வழங்குவதற்கு இடையூறாக இருந்தது. | முன்மொழிவும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்கான உப விதி ஒன்றை அங்கீகரித்து உரிய பாடநெறியை நடத்துவதற்கு ஆலோசனை கிடைத்துள்ளது. எனினும் உபவிதி அங்கீகரித்தல் மேலும் மேற்கொள்ளப்படாமையால் கணனி பாடநெறியை ஆரம்பிக்க முடியாதிருந்தது. | வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 133,017,835 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 10,199,253 தொகையும் காணப்பட்டது. இந்த செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மீதிகளை தீர்த்து வைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பைக் கண்டறிந்து விரைவாகத் தீர்த்து வைத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மார்ச் மாதத்தின் ரூபா 348,290 செலவில் கழிவுப் பொருள் நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கமரா முறைமை செயலிழந்திருந்தது. கமரா முறைமை செயலிழந்தமை மற்றும் காணாமல் போன உபகரணங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிதிப்பிரமாணக் கோவையின் 102, 103, 104 பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் CCTV கமரா முறைமை தொடர்புபடுத்துவதற்குரி CCTV கமரா முறைமையின் பகுதி ஒன்றை பழுது பார்ப்பதற்காக யாருக்கு வழங்கப்பட்டது, யாரினால் பெறப்பட்டது என்ற விடயங்கள் தற்போது உறுதிப்படுத்த முடியாது இருந்தமையால் இது தொடர்பாக பரீட்சித்து விடயங்கள் அறிக்கையிடப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மலக் கழிவுகள் உரியவாறு முகாமைத்துவம் செய்தல் மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்களைக் குறைப்பதற்காக ரூபா 1,214,198 செலவில் 2017 ஆம் ஆண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலைய வளவில் நிர்மாணிக்கப்பட்ட முறைமை மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | அது தொடர்பான விடயங்களைக் கண்டறிந்து தேவையான மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மலக்கழிவு முகாமைத்துவ முறைமையை அமுல் படுத்தும் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 17 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்கள் மற்றும் சுடலை காடுகள் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பணிகளுக்காக அதிகார பிரதேசத்திற்கு உரியதாகக் கருதி 15 மயான நிலங்கள் சபைக்கு கையேற்கப்படவில்லை. | இது வரை சபைக்கு கையளிக்கப்படத மயான நிலங்கள் தொடர்பாக பரீட்சித்து எதிர் வரும் ஆண்டின் போது உரிய கையேற்றல் நடவடிக்கைகளுக்காக நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஆதனங்களின் சட்ட ரீதியான உரித்தைக் கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் பிரதான அலுவலகம், நகர மண்டபம் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 17 வகையான விடயங்களில் 79 அலகுகளில் பற்றாக்குறை காணப்பட்டது. இது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 17 விடயங்களில் 79 அலகுகளில் பற்றாக்குறை காணப்பட்டமையால் அந்த 79 அலகுகள் தொடர்பாக மீண்டும் பரீட்சித்து தகவல்கள் சரி செய்யப்படும். | பொருள் பற்றாக்குறை தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபை அதிகார பிரதேசத்திற்கு உரிய மஹகெதரவத்த எனும் பெயருடைய காணி 2003 ஆம் ஆண்டில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் போது 01 ஏக்கர் 03 றூட் 29.07 பேர்ச் மற்றும் 01 றூட் 16 பேர்ச் அளவான 02 நிலக்கூறுகள் பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2025 மார்ச் இறுதி வரையிலும் காணியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வரைவிற்கு உரிய பொதுக் காணியின் கூறு இலக்கம் சரியாக இல்லாது இருந்ததன் அடிப்படையில் பதிவு செய்யப்படாது இருந்த்ததை குறிப்பிடுகின்றோம். அதன் பிரகாரம் தற்போது உரிய நிறுவனங்கள் செயற்படுமாயின் அந்த நிறுவனங்கள் ஊடாக இந்தப் பதிவினைச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் உரித்தை கையேற்றல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் இரண்டாம் தரத்தின் பதவிகளில் 19 வெற்றிடங்களும், ஆரம்ப தரத்தின் பதவிகளில் 20 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் வருமானப் பரிசோதகர் பதவிகளில் முறையே 03 உத்தியோகத்தர்கள் மற்றும் 04 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக வருமானம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள், அனுமதியற்ற நிர்மாணங்கள் | பதவி வெற்றிடங்கள் தொடர்பாக 2025 இன் பதவியணியினர் மீளாய்விற்காக தற்போது தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களை நிரப்பி சபையின் பணிகளை இடையூறு இன்றி நடாத்திச் செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக பரீட்சித்து கால ரீதியில் நிறைவேற்றுவதற்கு முடியாது இருந்ததுடன் வருமானத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தமையால் நிலுவை வருமானம் அதிகரித்துச் செல்லும் போக்கு ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2010 – 2024 காலப் பகுதியில் சேவையை விட்டுச் சென்ற, மரணமடைந்த, சுகாதாரக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெற்ற, சேவையை முடிவுறுத்திய மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் மற்றும் 36 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 1,302,073 அறவிடல் கைவிடப்பட்டிருந்தது. இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேவையை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பான தகவல்கள் சபையிடம் காணப்படாமையினால் இந்த நிலுவையை அறவிடுவதற்கான இயலுமை காணப்படாது இருந்தமையால் பதிவழிப்பதற்கு கோரி உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்று அங்கீகாரம் வழங்கப்படது இருந்தமை மற்றும் ஏனைய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அறுவைக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக 2002 ஆம் ஆண்டின் போது 04 நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 450,000 தொகை உரிய பணிகளுடன் தொடர்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுமாறு 2016 ஒக்தோபர் 13 ஆந் திகதி கணக்குக் குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அந்த தொகை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக வழக்கு இலக்கம் 61156, 61157, 61158 என்ற வழக்குகளில் பிரதிவாதிக்கு எதிராக உரிய தொகையை அறவிடுவதற்கு மாறவில நீதவான் நீதிமன்றத்திற்கு மனுவொன்றின் ஒன்றின் மூலம் திறந்த பிடியாணை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்குக் குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவினத் தலைப்பு 102 இற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 13,050,461 முழுமையான நிதியேற்பாடும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | விசேடமாக கடந்த ஆண்டில் தேர்தல் நடைபெற்றதன் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்கள் அநேகமானவை மேற்கொள்ளாமை காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | பாதீடு செய்யப்பட்ட இலக்கை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகளை திட்டமிடல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 16 இனங்கண்டு அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளும் 51 நிகழ்ச்சித் திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் 10 அதாவது 22 சதவீதம் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த காலப் பகுதியில் காணப்பட்ட மோசமான காலநிலையின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட பிரகாரம் அந்த நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. அதனால் அந்த ஒப்பந்தங்கள் கடன் கொடுத்தோர் ஆக்கப்பட்டதுடன் தற்போது அந்த நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் காணப்படுகின்றது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |